[1975 நவம்பர் 10

திருநெல்வேலி மாவட்ட அரிசன நலப் பணிக்கு நிதி ஒதுக்கீடு

*274 வினு—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திற்கு அரிசன நலத்துறைக்கென ஒதுக்கப்பட்ட 1973-74-ம் ஆண்டுக்கான நிதி செலவு செய்யப்பட்டதா?

(இ) இல்லை எனில், அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) ஆம். ஏறக்குறைய முழுவதும் செலவு செய்யப்பட்டுள்ளது.

(இ) இடமில்லை.

அன்னுவரம் அரிசனக் குடியிருப்பு

*275 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி வட்டம், அன்னுவரம் அரிசனக் காலனிக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) ஆம்.

(இ) இன்னும் ஒரு மாதத்தில் வேலை முடிந்து விடும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த அன்னுவரம் காலனியில் இருக்கிற அரிசன மக்கள், மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள். ஒரு மாதத்தில் முடிந்து விடும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எல்லாத் தெருக்களுக்கும் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, அந்தக் குறிப்பு இல்லை. அன்னுவரம் காலனிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் எப்போது முடிவடையும் என்று கேள்வி. அதற்கு ஒரு